# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 08 புதன்கிழமை 18.09.2024 கதிர் 364







# ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றது

## நாளை முதல் கடும் கண்காணிப்புக்கு ஏற்பாடு

சனிக்கிழமை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அனைத்து பரப்புரைகளும் இன்று 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவுபெற வேண்டுமெனவும் அதன் பின்னர் எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது ஆதரவாளரோ தேர்தல் தொடர்பான பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபடுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகளுக்கு 6 வார கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னர் 48 மணித்தியாலங்களுக்குள் அனைத்து பரப்புரை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

6➤




# அதிதீவிர பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இன்று இறுதிப் பரப்புரைக் கூட்டங்கள்

## தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள படையினர்

தேர்தல் பரப்புரைகள் இன்று நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளதால் பிரதான வேட்பாளர்கள் இறுதிப்பரப்புரைக் கூட்டங்களை பிரமாண்டமாகவும் வெற்றிகரமாகவும் நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகளும் ஆரம்பித்துள்ள நிலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கூட்டணிகளின் தலைவர்கள் அனைவரும் கடைசி கூட்டத்தில் ஒன்றாக பங்கேற்பதால் உச்சகட்ட பாதுகாப்பு ஏற்பாட்டுக்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரின் கடைசி தேர்தல் பிரசாரக்கூட்டம் கொழும்பு மாநகர எல்லையை மையப்படுத்தியதாக அமையவுள்ளது.

தேர்தலுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலங்களில் பாதுகாப்பை தீவிரப்படுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்கு பிந்தைய காலம் முழுவதும், பாதுகாப்பு நடவடிக்கைகள் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய இராணுவத்தினர் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்புப் படைகளின் பிரதானி அனைத்து பாதுகாப்புப்படைத்தளபதிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பேச்சுக்கள் தோல்வியடைந்ததால்தான் பொது வேட்பாளரை களமிறக்கினோம்

## மட்டக்களப்பு பேரணியில் அரியநேத்திரன்



நாங்கள் இதுவரை எட்டு ஜனாதிபதிகளுக்கு வாக்களித்திருக்கின்றோம். வாக்களிக்கா விட்டாலும் பலதரப்பட்ட பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோம். அவை யாவும் வெற்றியளிக்காத நிலையிலேயே நான் பொது வேட்பாளராக களமிறக்கப்பட்டுள்ளேன் என தமிழ்ப் பொதுக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்க் கட்டமைப்பின் பொது வேட்பாளரை ஆதரிக்கும் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தலைமையில் கல்லடி மீனிசைப் பூங்காவில் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

போர் மௌனிக்கப்பட 22 பன்னாட்டு இராணுவங்கள் உதவின. அவ்வாறு உதவும் போது அவர்கள் சில கோரிக்கைகளை அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷயிடம் முன்வைத்திருந்தனர்.

அப்போது அவர்கள்

6➤

# மேய்ச்சல்தரை பிரச்சினைக்கு பதவிக்கு வந்தவுடன் தீர்வு

## கல்லடி கூட்டத்தில் சஜித் உறுதி!

(வி.ரி.சகாதேவராஜா)

‘மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிப்பேன். அத்துடன் நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வரும் மயிலந்தமடு, மாதவனை மேய்ச்சல் தரைப் பிரச்சினையை நான் ஜனாதிபதியாக வந்தவுடன் தீர்த்து வைப்பேன்”

இவ்வாறு மட்டக்களப்பு கல்லடி சிவானந்த

6➤



# கொழும்பில் இன்று மாலை அரியம் ஆதரவுப் பரப்புரை

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளருக்கான பரப்புரைக் கூட்டம் இன்று புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பம்பலப்பிட்டி வெஸ்டன் ஹோட்டலில் இன்று மாலை 5.30 மணியளவில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதில் முன்னாள் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் சட்டத்தரணி புவிதரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

# தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் எதற்காக பொது வேட்பாளரை எதிர்க்கின்றார்கள்?

## இணுவில் கூட்டத்தில் ஐங்கரநேசன் கேள்வி

தமிழ்ப் பொதுவேட்பாளரைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள்எதிர்ப்பதன்காரணம்வெளிப்படையானது. சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க, அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கிடையே மும்முனைப் போட்டி நிகழுகின்ற நிலையில் அவர்களுக்குத் தமிழ்ப் பொதுவேட்பாளர் இடையூறாக இருக்கிறார். ஆனால்தமிழ்த் தேசியம் பேசுகின்ற சிலரும் தமிழ்ப் பொதுவேட்பாளர் மீது வசைபாடுகின்றனர். யானை பார்த்த அந்தகர்களைப் போன்று, தமிழ்ப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டிருப்பதன் தார்ப்பரியங்களை முழுமையாகப் புரிந்துகொள்ளாத அரசியல் அந்தகர்களாக இவர்கள் இருக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்ப்பொதுவேட்பாளர்பா.அரியநேத்திரனை ஆதரித்து இணுவில்அண்ணா சனசமூகநிலைய முன்றலில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பரப்புரைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

‘தமிழ்ப் பொதுவேட்பாளர் இந்தியாவின் ஆலோசனையின் பேரில் நிறுத்தப்பட்டிருப்பதாக இந்த அரசியல் அந்தகர்கள் விமர்சிக்கின்றார்கள். எதற்கெடுத்தாலும் இந்தியாவைக் குற்றம் சாட்டும் மனோநிலையில் உள்ள அரசியல் அந்தகர்களின் விமர்சனமே இது. இதுவரையில் இந்தியா தமிழ்ப் பொதுவேட்பாளருக்குச்சாதகமான கருத்துகள் எதனையும் எங்கும் தெரிவித்திருக்கவில்லை. மாறாக, கொழும்பு அரசியலில் தலையீடு செய்ய விரும்பும் எந்தவொரு வெளிநாட்டு அரசியல் சக்திக்கும் பொதுவேட்பாளர் என்பவர் இடையூறாகவே அமைவார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்பதற்காகவே நிறுத்தப்பட்டுள்ளார் என சஜித் பிரேமதாசாவுக்கு வாக்குக் கேட்டுத் திரியும் தமிழ் அரசியல் வாதிகள் விமர்சிக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்காவுக்கு ஆதரவாகச்செயற்படுவதாயின் இந்த அரசியல்வாதிகளைப் போன்றே ரணிலிடம்பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு பொதுவேட்பாளரை நிறுத்தாமல் நேரடியாகவே அவருக்குப் பிரச்சாரத்தை செய்திருக்கமுடியும். தமிழ்ப் பொதுவேட்பாளர் யாரோ ஒருவரின் வெற்றி வாய்ப்பைப் பாதிப்பார். அதற்காக யாரோ ஒருவரின் சார்பில் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டிருப்பார் என்று கூறுவது அபத்தமானது’ என்றும் தெரிவித்தார்.

# சலுகைக்கான ஒப்பந்த அரசியல் தேவையில்லை

## சங்கை ஆதரித்த பொது கூட்டத்தில் நிரோஸ்

விடுதலைப்போராட்டம் அழிக்கப்பட்ட நிலையில் எம்மிடம் இருக்கக் கூடிய வாக்குரிமை என்ற ஜனநாயக ஆயுதத்தினை எமது இனத்தின் அரசியல் விடிவிற்காக நாம் பயன்படுத்தவேண்டுமே தவிர அதனை அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்காக போலி உத்தரவாதம் தரும் பேரினவாதிகளுக்கு இரையாக்கக் கூடாது என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

சங்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் வேட்பாளர் பா. அரியநேத்திரனை ஆதரித்து புண்டத்தரிப்பு சாந்தையில் நேற்று இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், தமிழ்த் தேசியம் இன்று தேசிய நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளவர்களாலேயே பெரும் சவாலுக்குட்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்த் தேசியத்தில் பயணிப்போர் சிலர் தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றிய வேட்பாளர்களுக்கு ஆதரவாக இங்கே மேடை ஏறுகின்றனர். அப்படியாக அகச் சவால்கள், சோதனைகள் நிறைந்த ஓர் தேர்தலாக இம் முறைய தேர்தல் எம் முன் வந்து நிற்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் என்பது பொரும் உழல்வாதிகள், அரசியல் பலம் பொருந்தியவர்களை எதிர்த்து போட்டியிடுகின்ற விடயமாகும். இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியப் பரப்பில் நாம் கொள்கை இலட்சியங்கள் எனப் பயணிக்கையில் தேர்தல் என்றால் பெருந்தொகை நிதி வேண்டும். அது வேண்டும் இது வேண்டும் என இன்றும் எமது மண்ணில் தமிழ்த் தேசியம் பேசும் பலரும் பேரினவாத வேட்பாளர்களுக்கு சேவகம் செய்கின்றனர்.

பேரினவாதச் சிந்தனை உடைய அடிப்படையில் அரசியல் தீர்வு விடயத்தில் சாதாரணமாக இருக்கக் கூடிய தீர்வுகளை முன்னிறுத்தி அவற்றை நிறைவேற்றுவதற்குக் கூட உத்தரவாதமற்ற நிலைமைகளுக்குள் சில தமிழ்த் தலைவர்கள் சிக்கியுள்ளனர்.

தம் விழுந்தது மாத்திரமல்லாது எமது மக்களையும் வீழ்த்தி ஒப்பந்த அரசியல் செய்ய நினைக் கின்றார்கள்.

# வாகன விபத்தில் மாணவி பலி!

*(வி.ரி.சகாதேவராஜா)*

*சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் தரம் 9 பயிலும் 14 வயது மாணவி வாகன விபத்தில் பரிதாபகரமாக பலியானார்.*

*இச் சம்பவம் இன்று புதன்கிழமை காலை காரைதீவு பொலீஸ்பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளியில் சம்பவித்துள்ளது.*

*அம்பாரை - கல்முனை வீதியில் மாவடிப்பள்ளி பெரியபள்ளி வாசலுக்கு முன்பாக இன்று புதன்கிழமை காலை 08.15 மணியளவில் நடைபெற்ற வாகன விபத்தில் 14 வயது சிறுமி ஸ்தலத்தில் மரணமடைந்துள்ளார்.*

*சம்மாந்துறைவலயக்கல்விப்பணிமனையில் விசேட கல்விக்கு பொறுப்பான ஆசிரிய ஆலோசகர் அகமட்லெவ்வையின் புதல்வியாவார்.*

*மோட்டார் சைக்கிளில் தந்தையுடன் பயணித்துக் கொண்டிருந்த மாணவியின் மீது தனியார் போக்குவரத்து பஸ் ஒன்று மோதியதிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிகிறது.*

*சம்மாந்துறையை சேர்ந்த மாணவி இவ்வாறு விபத்தில் மரணமடைந்த செய்தி காட்டுத் தீ போல் பரவியது.சம்மாந்துறை சோகமயமாக உள்ளது.*

*இந்த விபத்து நடந்தவுடன் குறித்த பஸ்ஸின் சாரதி விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பி ஓடியுள்ளார் என்றும் இந்நிலையில் தற்போது பஸ் சாரதி காரைதீவு பொலிஸில் சரணடைந்துள்ளார் என்றும் தெரிகிறது.*

*காரைதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# சமூக ஊடகங்கள் மீது தீவிர கண்காணிப்பு

## கட்டுப்படுத்த விசேட பொறிமுறை

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் இன்றுநள்ளிரவுடன்நிறைவடையவுள்ள நிலையில் அதன் பின்னரான 48 மணித்தியாலங்கள் மௌன காலப் பகுதியில் வேட்பாளர்களின் பிரசாரம் மற்றும்வேட்பாளர்களுக்கு எதிராக சமூக வலைதளங்களில் முன்னெடுக்கப்படும் பிரசார நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான விரிவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் இன்று 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைவதோடு, 19 ஆம் திகதி மற்றும் 20 ஆம் திகதி ஆகிய நாட்கள் மௌன காலமாக இருக்கும். இந்த காலப் பகுதியில் பரப்புரைகள் செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பரப்புரைகள் மேற்கொள்வதை தடை செய்வதற்கான பொறிமுறை இதற்கு முன்னரான தேர்தல்களில் பின்பற்றப்படவில்லை.

சமூக வலைத்தளங்கள் ஊடாக தேர்தல் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுவதை தடுப்பதற்கு அவற்றை முடக்கும் செயற்பாடுகள் சாத்தியமற்றதாக காணப்படுகின்றது. இதனால் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் சமூக ஊடக வலையமைப்பைச் சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து தேர்தல் பரப்புரைகளைத் தடுக்கும் நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளன.

தற்போது சமூக வலைத்தளங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் இந்தப் பரப்புரைகள் பெரும்பாலானவை வெளிநாடுகளில் இருந்து மேற்கொள்ளப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதற்காக அதிகளவான அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதனால் தேர்தல் மௌன காலப்பகுதியிலும் தேர்தல் பரப்புரைகள் மற்றும் வேட்பாளர்கள் மீதான அவதுறு பிரசாரங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுவதால் அவற்றை நீக்குவது தொடர்பாக கலந்தாலோசிக்கப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் தேர்தல் விதிமுறைகளை கடுமையாக அமுல்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதுடன் சமூக வலைதளங்களில் பிரச்சாரம் செய்வதற்கும்தடை விதிக்கப்பட்டுள்ளது.

Semba Services (Pvt) Ltd

விமான நிலைய போக்குவரத்து மற்றும் சுற்றுலா ஏற்பாடுகள்

மேலதிக விபரங்களுக்கு
+94 77 3078 799



நாடுமுழுவதும்
• நட்சத்திர வீடுதிகளில் தங்குமிட வசதி
• சுற்றுலா ஒழுங்கமைப்பு வசதிகள்
• போக்குவரத்து வசதிகள்

*Terms and conditions apply

#551A, kasthuriyar Road, Jaffna.
#45A, Pennyquick Lane, Colombo 06



# மிதி வெடி

தங்களுக்குள்ள ஒற்றுமையா இருக்க முடியாதவை எப்பிடி மற்றவைய வழிநடத்த முடியும் பாருங்கோ? தமிழரைத் தலைமை தாங்கக் கூடிய தகுதி அவர் ஒருத்தரைத் தவிர ஆருக்குமே இல்லை எண்டதை வரலாறு மறுபடியும் நிஷரூபிச்சுப் போட்டுது....

சும்மாவே ஒற்றுமையா இருக்கிறவைக்குள்ள புகுந்துவிளையாடிப் பிரிச்சு மேயுறதில கில்லாடியான ஆள் தனக்குத் தனக்கெண்டு வரேக்க சும்மாவே இருக்கப் போறார்? சிதைச்சுச் சின்னாபின்னமாக்கிப் போட்டார்.

எண்டைக்கு உவையள் எல்லாரும் சின்னத்துக்கும், கதிரைக்குமாக் கன்னை பிரிஞ்சு நிண்டு அடிபடத் தொடங்கிச்சினமோ அண்டைக்கே நான் சொன்னனான்.... உவையள் உருப்படாயினம் எண்டு... அவையள் இருக்கேக்க அதென்னமோ தெரியேல்ல எல்லாரும் அடக்கி வாசிச்சவை. “கேக்க ஆள் இல்லை எண்ட உடன தம்பி சண்டப் பிரசண்டனா”ப் போனார் எண்ட கதையாப் போச்சுது....

அரசியல்வா(வி)திகள் தங்கட நலனுக்காகத் தான் செயற்படுவினம் எண்டது ஊரறிஞ்ச விசியம் தானே.... ஆனாலும் பாருங்கோ உந்த சாராயக் கடை “பெர்மிற்” விசியத்தின எங்கட தேசியம் பேசுறவர் போய் மாட்டுப்பட்டாரே எண்டதை நம்புவியளோ? தேர்தலை இலக்கு வைச்சுக் காய் நகர்த்தினவை சும்மா ஏதாவது செயவினமே? அவையிற்றப் போய் களவாக் கை நனைக்கப் போய் இப்ப மெள்ளவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் முழிச்சுக் கொண்டு நிக்கினம். தேரை இழுத்துத் தெருவில விட்டுப் போட்டு, இப்ப அதை எப்பிடிக் கரை சேர்க்கிறது எண்டதைப் பற்றி யோசிக்காமல், தெரிவில வைச்சு அதை எப்பிடிச் சின்னாபின்னமாக்கலாம் எண்டெல்லே யோசிக்கினம்..... உது பரவாயில்லை. அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை : நிரந்தர எதிரியும் இல்லை எண்டது போல அவையள் பருவத்துக்கொருக்காப் பக்கம் மாறி நிப்பினம் எண்டது விளங்கும் தானே?

ஆனாப் பாருங்கோ... அறப் படிச்ச பல்லி கூழ்ப் பானைக்குள்ள விழுந்த கதையா.... உங்கால பெரிய பள்ளிக் கூடத்தில இருக்கி கொஞ்சப்பேர்.. எல்லாருக்கும் நல்ல பிள்ளையளா நடிக்க வெளிக்கிட்டு மாட்டுப் பட்டுப் போய் நிக்கினமாம்... வழக்கமாப் பாருங்கோ... நல்லவை - நாலு எழுத்துப் படிச்சவை சொன்னால் அது நன்மைக்காத் தான் இருக்கும் எண்டு சனம் நம்பினது கொஞ்சக் காலம் வரைக்கும் இருந்தது தான். ஆனா இப்ப எல்லாரும் ஏதோ ஒரு வகையில விலை போயிற்றினம் தான் பாருங்கோ..... பாம்புக்குத் தலையையும் காட்டி மீனுக்கு வாலையும் காட்டிக் கொண்டிருந்த கொஞ்சப் பெரிய ஆக்கள் இப்ப அப்பட்டமா “லொக்” ஆகிப் போய் நிககினமாம்....

பெரிய பள்ளிக் கூடத்தில படிப்பிக்கிறவை கொஞ்சப் பேர் – “பெட்டிசம்” போடுறத்துக்குப் பேர் போன ஆக்கள் கொஞ்ச நாளாத் தங்கள விசிலடிச்சான் (“விசில் ப்ளோவர்ஸ்”) குஞ்சுகள் எண்டு நினைச்சுக் கொண்டு கண்டசன் நிண்டவன் எல்லாரோடும் வாய் வைச்சுக் கொண்டு வந்தவை. அந்த முறைத் தேர்தல் வந்த உடனயும் தாங்கள்”பெரிய ஆக்கள்” எண்டு நினைச்சுக் கொண்டு, அங்கயும் இங்கயுமாத் திரிஞ்சு போட்டு அறிக்கை ஒண்டை விட்டு வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கினமாம்... என்னத்தைச் சொல்ல இப்ப இப்பத் தான் அவையவையிண்ட உண்மையான முகங்கள் அம்பலப் படத் தொடங்கியிருக்கு... அது விரைவில முழுசாத் தெரிய வருமெண்டு நம்புறன்.

என்னதான் சொன்னாலும், தமிழ் மக்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு தங்களுக்கானது தான் எண்டு பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டும் ஒருமுறை நிஷரூபித்திருக்கி றார்கள்... காசுக்கும், பட்டம் – பதவியளுக்கும் விலை போன தலைவர்கள் மற்றும் படிச்சவைக்கு மத்தியிலும், சனத்துக்குச் சரியானதைச் சொல்ல வேணும் எண்ட பொறுப்பு இந்தச் சின்னப் பிள்ளையளுக்கு வந்திருக்கு... ஆனா என்க்கென்னமோ அது கூடக் காலங்கடந்து போச்சுதோ எண்டு தான் நினைக்கிறன்... ஆனாலும் பாருங்கோ சில மதில் மேல் பூனைகளைப் பிடிச்சுப் பக்கத்தில வைச்சிருக்கிறதைப் பரிசீலனை செய்யுறது நல்லம் எண்டு சொல்ல வேண்டிக் கிடக்கு. எதைச் செய்தாலும், கொஞ்சம் சரியாச் செய்யுங்கோ தம்பியவை....

நரமுனி

# மும்முனைப் போட்டியில் முந்தப் போவது யார்?

**முரளிதரன் காசிவிஸ்வநாதன்**







ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மற்றொரு எதிர்க்கட்சியைச் சேர்ந்த அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கிடையே நிலவும் மும்முனைப் போட்டியில் வெல்லப்போவது யார்?

இலங்கையின் பத்தாவது ஜனாதிபதியைத் தேர்வுசெய்வதற்கான தேர்தல் வரும் செப்டம்பர் 21ஆம் தேதி நடக்கவிருக்கிறது. இந்தத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அநுரகுமார திஸநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் முக்கிய வேட்பாளர்களாகப் பார்க்கப்படுகின்றனர். இவர்கள் தவிர, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் மகன் நாமல் ராஜபக்ஸவும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

2019ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவை சேர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சஜித் பிரேமதாசவைத் தோற்கடித்து மிகப் பெரிய வெற்றியைப் பெற்றார்.

ஆனால், 2022ஆம் ஆண்டு அந்நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்கள் மிகப் பெரிய போராட்டத்தில் இறங்கினர். இதனால் ஏற்பட்ட நெருக்கடியையடுத்து, கோட்டாபய பதவி விலகிக் கொள்ள, நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் ரணில் விக்ரமசிங்க 9 வது ஜனாதிபதியாக 2022ஆம் ஆண்டு ஜுலை 21ஆம் தேதி பதவியேற்றார்.

சுமார் 20 ஆண்டுகளாக இலங்கையில் ஆதிக்கம் செலுத்தி ராஜபக்ஷ சகோதரர்கள் இந்தத் தேர்தலில் ஓரம்கட்டப்பட்டிருக்கின்றனர். அதேபோல, இலங்கையின் பாரம்பரிய கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கிட்டத்தட்ட சிதைந்துபோய்விட்டன. ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணி ஒரு முக்கியமான அரசியல் சக்தியாக உருவெடுத்திருக்கிறது.

ரணிலுக்கு பொதுஜன பெரமுனவின் சிலரும் ஆதரவளித்துள்ளனர். டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகியவையும் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

சஜித் ஐக்கிய மக்கள் சக்தி முன்னணியின் சார்பில் போட்டியிடுகிறார். இஸ்லாமியக் கட்சிகளான மக்கள் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், மனோ கணேசனின் தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை தமிழரசுக் கட்சி, மலையக மக்கள் முன்னணி ஆகியவை சஜித்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அநுர தேசிய மக்கள் சக்தி என்ற முன்னணியின் சார்பில் களத்தில் நிற்கிறார். பல்வேறு கட்சிகள் இணைந்து உருவாக்கியிருக்கும் இந்த முன்னணியில் மார்க்ஸிய - லெனினிய சார்பு கொண்ட ஜனதா விமுக்தி பெரமுன முக்கியமான கட்சியாக இருக்கிறது.

நாமல் பொதுஜன பெரமுனவின் சார்பில் வேட்பாளராக களத்தில் இருக்கிறார். தங்கள் கட்சியில் பலர் ரணிலை ஆதரிக்கப் போவதாகச் சொன்னதும், தங்களுடைய வாக்கு வங்கியை மொத்தமாக இழந்துவிடாமல் இருக்க கடைசித் தருணத்தில் களமிறங்கியிருக்கிறார் அவர்.

இவர்கள் தவிர, தமிழ் பொது கூட்டமைப்பு என்ற பெயரில் சில தமிழ் அமைப்புகளும் சிவில் குழுக்களும் இணைந்து பாக்கியசெல்வம் அரியநேத்திரனை தமிழர்களுக்கான பொது வேட்பாளராக களத்தில் இறக்கியுள்ளனர். இவருக்கு ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், தமிழ் மக்கள் கட்சி என்பன ஆதரவு தெரிவித்துள்ளன.

ரணிலைப் பொறுத்தவரை, ‘We can Srilanka’ என்ற கோஷத்துடன், ஸ்திரத்தன்மையை முன்னிறுத்தி வாக்குகளை கோரி வருகிறார். பொருளாதார நெருக்கடியில் இருந்த நாட்டை, கடந்த இரு ஆண்டுகளில் மீட்சியை நோக்கி வழிநடத்தியதாகச் சொல்லி, தனக்கே மீண்டும் வாக்களிக்கும்படி கோருகிறார்.

சஜித், எல்லோருக்குமான வளர்ச்சியைத் தருவேன் என்றும் கல்வி, வேலைவாய்ப்புகளை உருவாக்குவேன் என்றும் கூறி வாக்குகளை சேகரிக்கிறார். தான் வெற்றிபெற்றால், தன்னுடைய அரசு எல்லோருக்குமானதாக இருக்கும் என்றும் கூறுகிறார்.

**சுமார் 20 ஆண்டுகளாக இலங்கையில் ஆதிக்கம் செலுத்தி ராஜபக்ஷ சகோதரர்கள் இந்தத் தேர்தலில் ஓரம்கட்டப்பட்டிருக்கின்றனர். அதேபோல, இலங்கையின் பாரம்பரிய கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் கிட்டத்தட்ட சிதைந்துபோய்விட்டன. ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணி ஒரு முக்கியமான அரசியல் சக்தியாக உருவெடுத்திருக்கிறது.**

அநுர, ஊழலற்ற ஆட்சியை முன்னெடுக்கப் போவதாகச் சொல்கிறார். இலங்கை சுதந்திரமடைந்ததில் இருந்து ஆட்சியில் இருந்தவர்கள்தான் இலங்கையின் வீழ்ச்சிக்குக் காரணம் எனக் குறிப்பிடும் அநுர, மக்களை வைத்து தேச விடுதலை இயக்கத்தை உருவாக்கப்போவதாகவும் சொல்லியிருக்கிறார்.

50 சதவிகிதத்திற்கு மேல் வாக்குகளைப் பெற்றவரே வெற்றிபெற்றவராக அறிவிக்கப்படுவார். எந்த வேட்பாளரும் 50 சதவிகித்திற்கு மேல் வாக்குகளைப் பெறவில்லையென்றால், முதல் இரண்டு இடங்களைப் பிடித்த வேட்பாளர்கள் மட்டும் கணக்கில் எடுக்கப்பட்டு, அவர்களுக்கான விருப்ப வாக்குகள் எண்ணப்படும்.

ஒரு கோடியே 70 லட்சம் பேர் இந்தத் தேர்தலில் வாக்களிக்கவிருக்கின்றனர். இதில் சிங்களம் பேசும் மக்களின் வாக்குகள் 75 சதவிகிதம். வடக்கில் உள்ள தமிழர்கள், கிழக்கில் உள்ள இஸ்லாமியர்கள், மலையகத் தமிழர்கள் ஆகிய சிறுபான்மையினரின் வாக்குகள் மீதமுள்ள 25 சதவீதம். “இந்த முறை ரணில் - சஜித் - அநுர என மும்முனைப் போட்டி நிலவுவதால் ஒருவருக்கும் 50 சதவிகிதத்திற்கு மேல் வாக்குகள் கிடைக்க வாய்ப்பில்லை என்றுதான் கருதுகிறேன். ஆகவே, விருப்ப வாக்குகளை எண்ண வேண்டியிருக்கும். இலங்கையில் இதுவரை நடந்த தேர்தல்களிலேயே மிக இழுபறியான ஜனாதிபதி தேர்தலாக இது இருக்கும்” என்கிறார் மூத்த பத்திரிகையாளரான வீரகத்தி தனபாலசிங்கம். “இந்தத் தேர்தலில் பொருளாதார நெருக்கடிதான் வாக்குகளை முடிவு செய்யக்கூடிய முக்கியப் பிரச்னையாக இருக்கும். புதிதாக வரும் ஜனாதிபதி இலங்கைக்கும் சர்வதேச நிதியத்திற்கும் இடையில் உள்ள ஒப்பந்தத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது. தமிழர், இஸ்லாமியர் போன்ற சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை எதிர்காலத்தில் அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுமா, அதிகாரப் பகிர்வு கிடைக்குமா என்ற கேள்விகள் இருக்கின்றன. மேலும், யுத்தம் முடிந்து இத்தனை ஆண்டுகள் ஆன பிறகும் வடகிழக்கில் இராணுவம், தொல்பொருள்துறையின் காணி அபகரிப்பு காணப்படுகிறது. ஆனால், புதிய அரசு இவ்வாறான விஷயங்களைத் தீர்த்துவைக்குமா என்ற கேள்வியும் இருக்கவே செய்கிறது.” என்கிறார், அரசியல் பொருளாதார ஆய்வாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி அகிலன் கதிர்காமர். சிறுபான்மையினரைப் பொருத்தவரை, எல்லாப் பிரிவினருமே பிரிந்துகிடப்பதால் அவர்களது வாக்குகள் யாருக்குக் கிடைக்கும் என கணிப்பது கடினம். இந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு தமிழர் அரசியல் சிதறும் வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறார் அகிலன் கதிர்காமர்.

“இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை தமிழர் அரசியல் குழப்பமான நிலையில் இருக்கிறது. சில தமிழ் தேசியவாதிகள் ஒரு பொது தமிழ் வேட்பாளரை முன்வைத்துள்ளனர். தெற்குடன் இணைந்து போகாமல் பிளவுபடுத்தும் அரசியலை முன்வைப்பதுதான் அதன் நோக்கம். என்னைப் பொறுத்தவரை, ஜனாதிபதி தேர்தலில் பேரம் பேசும் சக்தியாக தமிழர் அரசியல் உருப்பெற வேண்டும். ஆனால், தற்போதுள்ள தமிழ் அரசியல் சக்திகள் தமிழர்களுக்கு என ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்துவது அல்லது தேர்தலைப் புறக்கணிப்பது ஆகிய இரு வாய்ப்புகளையே முன்வைக்கின்றனர். வடக்கில் தமிழ் தேசியவாதத்தையும் தெற்கில் சிங்கள பௌத்தவாதத்தையும் இவர்கள் உருவாக்க நினைக்கிறார்கள்.” என்கிறார் அவர்.

“இந்தத் தேர்தலில் இனவாதப் பிரசாரம் சுத்தமாக இல்லை என்பது கவனிக்கத்தக்கதாக இருக்கிறது என்கிறார் அவர். “மூன்று பிரதான வேட்பாளர்கள் இருப்பதால், தென்னிலங்கையின் வாக்குகள் மூன்றாகப் பிரியும். ஆகவே வெற்றிபெற வேண்டுமானால் சிறுபான்மையினரின் வாக்குகள் மிக முக்கியம். ஆகவே, எந்த பிரதான வேட்பாளரும் இனவாதப் பிரசாரத்தில் ஈடுபடவில்லை. நாமல் மட்டும் அதிகாரத்தை பகிர மாட்டோம் எனப் பேசுகிறார். மற்றவர்கள் அப்படி எதுவும் பேசுவதில்லை” என்கிறார் தனபாலசிங்கம்.

தேர்தலுக்குப் பின், ராஜபக்ஷ குடும்பத்தினரின் அரசியல் எதிர்காலம் என்னவாகும்? என்ற கேள்விக்கு, “ராஜபக்ஷக்கள் இந்தத் தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்பு குறைவு. ஆனால், புதிதாக வரும் ஆட்சி பொருளாதார நிலையை சரியாகக் கையாளாவிட்டால், அவர்கள் மீண்டும் செல்வாக்குப் பெறலாம். பிலிப்பைன்ஸில் இமெல்டா மார்கோஸின் மகன் மீண்டும் அதிபராகியிருப்பதைப் போல இங்கேயும் நடக்கலாம். அவர்கள் அரசியலுக்குள் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்றே கருதுகிறார்கள்” என்கிறார் அகிலன் கதிர்காமர்.

# சஜித்தை ஆதரிக்கும் சுமந்திரனின் முடிவால் எனக்குப் பாதிப்பு இல்லை

## திட்டவட்டமாகக் கூறிய ரணில் விக்கிரமசிங்க



“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் தரப்பினர் சஜித்தை ஆதரிக்க எடுத்த தீர்மானத்தால் எனக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது” என்று சுயேச்சை ஜனாதிபதி வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த போது, தமிழரசுக் கட்சியின் தீர்மானம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேதாசவை ஆதரிப்பது என்ற முடிவை தமிழரசுக் கட்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிவித்தது. இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சிக்குள் பாரிய பிளவு ஏற்பட்டிருக்கும் நிலையிலும், சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற தீர்மானம் தமிழரசுக் கட்சியின் விசேட குழுவினால் எடுக்கப்பட்டது.

கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சிறிதரன் உட்பட பலர் இதனை எதிர்தது்ள்ளார்கள். அதேவேளையில், கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, பொது வேட்பாளருக்கு ஆதரவான கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இந்தப்பின்னணியில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, “தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவருக்கும் ஆதரவு என்று கூறவில்லை. அதில் பல கட்சிகள் உள்ளன. சுமந்திரன் போன்றோர் சஜித்துக்கு ஆதரவளிப்பதாக கூறினாலும் மற்றையவர்கள் யாரையும் ஆதரிக்கவில்லை” என்று தெரிவித்தார்.

“தமிழர் பிரச்சினைகள் இவ்விடத்தில் சம்பந்தப்பட்டது அல்ல. இது பொருளாதாரப் பிரச்சினையுடன் தொடர்புடையது. இதனால் விரும்பியவர்களுக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றனர்” என்றும் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, தான் மன்னார் செல்லவிருப்பதாகவும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்குகின்றனர். இதனால் தனக்கு பிரச்சினையில்லை” என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளால் 100 கோடி ருபா இலாபம் கிடைத்தது!

## தனியார் பேரூந்து சங்கத் தலைவர் மகிழ்ச்சி



ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளால் தமக்கு 100 கோடி ஷரூபாய் இலாபம் கிடைத்துள்ளதாக தனியார் பேரூந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று புதன்கிழமை கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள இணையத்தளம் ஒன்று வெளியிட்ட செய்தியில் இது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களின் பேஷரூந்து சேவைகளுக்காக 200 கோடி ஷரூபாவுக்கும் அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் எமக்கு கிட்டத்தட்ட 100 கோடி ஷரூபாய் இலாபம் கிடைத்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பரப்பரைகள் நிறைவடையவுள்ள இன்று இடம்பெறும் கடைசி பொதுக் கூட்டங்களுக்காக ஒவ்வொரு அரசியல் கட்சி மற்றும் குழுவினால் சுமார் 1,500 பேஷரூந்துகள் கோரபப்பட்டுள்ளன. தேசிய மக்கள் சக்தியினால் அதி கூடிய பேஷரூந்துகள் பெறப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கை முழுவதும் தேர்தல் கடமைகளுக்காக கிட்டத்தட்ட 500 பேஷரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை 20 ஆம் திகதி நாடு முழுவதும் 50 வீதமான பேஷரூந்துகள் இயக்கப்படும். தேர்தல் இடம்பெறும் 21ஆம் திகதி 10 வீதம் முதல் 15 வீதம் வரை பேஷரூந்துகளை இயக்குவதற்கு கட்டணம் அறவிடப்படும்.

அன்றைய நாள் தொலைதூர சேவை பேஷரூந்துகளுக்கு பாரிய பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் குளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

## ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒகஸ்ட் 15 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் 39 வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி வேட்பாளர்கள் தங்களது தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் இன்று 18ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைவதோடு, நாளை 19 ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 20 ஆம் திகதிகளில் தேர்தல் மௌன காலமாக இருக்கும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

நாளையும், நாளை மறுதினமும் பொது அல்லது தனியார் வாகனங்களில் வேட்பாளர்கள் மற்றும் கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஸ்டிக்கர்களை ஒட்டுவது, பதாதைகளை காட்சிப்படுத்துவது, துண்டு பிரசுரங்களை விநியோகிப்பது மற்றும் சமூக வலைதளங்களில் பிரசாரங்களை முன்னெடுப்பது என்பன சட்டவிரோதமாகுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மேய்ச்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மைதானத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரசாரப்பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசா உறுதியளித்தார் .

இந்தக் கூட்டம் மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சோ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

அங்கு சஜித் மேலும் பேசுகையில், இதுவரை முடியாத வீட்டுத் திட்டங்களை நான் வந்தவுடன் முடித்து தருவேன். அதேபோன்று ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கான ஏற்பாடு செய்வேன். விவசாயிகளுக்கு தரமான உரத்தை ஐயாயிரம் ரூபாவுக்கு பெற்று தருவேன். அத்துடன் விவசாயம் கடற்றொழில் நவீனமயமாக்கப்படும் என்று தெரிவித்தார்.

கூட்டத்தில் முஸ்லிம் தலைவர்கள் ரவூப் ஹக்கீம் றிஷாட் பதியுதீன் அமீரலி உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## பேச்சுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணைந்த வடக்குக்கிழக்கிற்கு தீர்வை வழங்குமாறு கோரியிருந்தனர். அதற்கு மஹிந்த சம்மதம் தெரிவித்திருந்தார். எனினும் எதுவும் நடக்கவில்லை. நாம் காலங்காலமாக ஜனாதிபதித் தேர்தல்களில் பலரை ஆதரித்தும் எதுவும் நடக்கவில்லை.

இந்நிலையில் 2015 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்ற மைத்திரிபால சிறிசேனவுடனும் பேசினோம். வாக்குறுதியளித்தார்கள். எதுவுமே செய்யவில்லை.

இவ்வாறான நிலையில்தான் அவர்களுக்கு ஓர்பாடம் புகட்ட வேண்டும் என்ற நோக்கோடு தமிழ்த் தேசிய கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளராக களமிறங்கியுள்ளேன்.

45 பேரை எடுத்து அதிலிருந்து இறுதியாக என்னைத் தெரிவு செய்தனர். நான் ஜனாதிபதியாக வர முடியாது. எனினும் நீங்கள் சங்குச் சின்னத்துக்கு அளிக்கும் வாக்கு உங்களுக்கான வாக்காகவே அமையும். எனவே நீங்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு எதிர்வரும் 21 ஆம் திகதி சங்குச் சின்னத்துக்கு வாக்களித்து சர்வதேசத்துக்கு எமது ஒற்றுமையின் பலத்தைக் காட்டுங்கள் என்றார்.

இத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன்,ஞா.ஸ்ரீநேசன்,முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரத்தினம்,முன்னாள் மாகாண சபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா,அரசியல் ஆய்வாளர் எஸ்.நிலாந்தன் மற்றும் சமயத் தலைவர்கள்,பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## தேர்தலை புறக்கணிக்க கோருவது சட்டவிரோதமான செயல் அல்ல

### கஜேந்திரன் நீதிமன்றத்தால் விடுதலை



ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பு செய்யுமாறு கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் பரப்புரையில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இவ்வாறு பரப்புரையில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட சிலரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அந்தவகையில் அவர்கள் இன்றையதினம் நீதிமன்றின் ஆஜராகினர். அவர்களது சட்டத்தரணிகள், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதும் புறக்கணிக்கக் கோருவதும் சட்ட விரோதம் ஆகாது என்று நீதிமன்றில் வாதிட்டனர். அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

அதன்பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் ஏனைய சந்தேகநபர்களும் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

## 2 வது விருப்பு வாக்கு எண்ண தயாராகுக

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

அனைத்து வாக்கு எண்ணும் நிலையங்களிலும் இரண்டாம் விருப்பு வாக்கு எண்ணுவதற்கு தேவையான ஏற்பாடுகளை உடனடியாக தயார் செய்யுமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தொகுதி தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு கடிதம் அனுப்பியுள்ளது.

அதன்படி, கூடுதல் அதிகாரிகளை தயார்படுத்தும் பணியில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் தொகுதி தேர்தல் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அரச தலைவர் தேர்தலுக்கான வாக்களிப்பு நாளாவிய ரீதியில் 13,421 வாக்களிப்பு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கைக்கு தயார் நிலையில் உள்ள வாக்கு எண்ணிக்கை நிலையங்களின் எண்ணிக்கை 1,274 ஆகும்.

இதற்கிடையில், வாக்குச்சாவடிகளில் காவல்துறை அதிகாரிகளுக்கு மேலதிகமாக காவல்துறை சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.







# ஒரே நேரத்தில் வெடித்த பேஜர்கள்! இஸ்ரேலின் திட்டமிட்ட தாக்குதலா?

லெபனானில் ஹெஸ்பொலா அமைப்பால் பயன்படுத்தப்பட்ட பேஜர்கள் வெடித்ததில் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர். செவ்வாயன்று நாடு முழுவதும் கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் பேஜர்கள் வெடித்து சிதறின.

இதில் ஒன்பது பேர் பலியாகினர். 2,800 பேர் காயமடைந்தனர், அவர்களில் பலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

இந்த சம்பவத்தில் ஹெஸ்பொல்லா இஸ்ரேலைக் குற்றம் சாட்டியுள்ளது. ஆனால், தாக்குதல் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றி தெளிவாகத் தெரியவில்லை. இஸ்ரேலிய அதிகாரிகள் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.



செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி சுமார் 15:45 மணியளவில் லெபனான் தலைநகர் பெய்ரூட் உட்பட நாட்டின் பல பகுதிகளில் பேஜர்கள் வெடிக்கத் தொடங்கியது. பட்டாசுகள் போன்றும் துப்பாக்கிச்சூடு போன்றும் சிறிய வெடிப்புகள் நிகழ்வதற்கு முன்னதாக, சிலரில் பாக்கெட்டுகளில் இருந்து புகை வருவதைக் கண்டதாக சாட்சிகள் தெரிவித்தனர்.

ஆரம்பத்தில் சிறியளவில் வெடிக்கத் தொடங்கியது பின்னர் சுமார் ஒரு மணி நேரம் இது தொடர்ந்தது என்று ராய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது. அதன் பின்னர் ஏராளமான மக்கள் லெபனான் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் குவிந்தனர். மருத்துவமனைகளில் மக்கள் கூட்டம் நிரம்பி, குழப்பமான சூழல் நிலவியதாக நேரில் பார்த்த சாட்சிகள் தெரிவித்தனர்.

செவ்வாய் கிழமை நடந்த தாக்குதலின் அளவை குறிப்பிட்டு ஆய்வாளர்கள் அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

பேஜர் பட்டரிகள் அதிக வெப்பமடைவதற்கு ஹஹேக்கிங்' காரணமாக இருக்கலாம், இதனால் சாதனங்கள் வெடித்திருக்கலாம் என்று சிலர் கூறினர். இதுபோன்ற செயல் முன்னெப்போதும் நிகழாத ஒன்று. பட்டரிகள் அதிக வெப்பமடைந்து அது நிகழ்ந்திருப்பதாக தெரியவில்லை என்று கூறினர்.

மாற்றாக, பிற ஆராய்ச்சியாளர்கள் பேஜர்கள் தயாரிப்பு அல்லது விநியோகத்தின் போது தாக்குதல் நடக்கும் வகையில் மாற்றப்பட்டிருக்கும் என்று வாதிடுகின்றனர்.

'சப்ளை செயின்' தாக்குதல்கள் இணைய பாதுகாப்பு உலகில் வளர்ந்து வரும் பிரச்னையாக உள்ளது, சமீபத்தில் ஹேக்கர்கள் சில சாதனங்களை அவற்றின் தயாரிப்பின் போதே அணுகி அவற்றை மாற்றி அமைக்கின்றனர். இதன் மூலம் பல உயர்மட்ட சம்பவங்கள் ஏற்படுகின்றன.

ஆனால் இந்த தாக்குதல்கள் பொதுவாக மென்பொருள் சார்ந்து இருக்கும். வன்பொருள் சார்ந்த விநியோகச் சங்கிலி தாக்குதல்கள் மிகவும் அரிதானவை, ஏனெனில் சாதனத்தில் நேரடியாக மாற்றங்கள் செய்ய வேண்டி இருக்கும்.

இது விநியோகச் சங்கிலி தாக்குதலாக இருக்கும் பட்சத்தில், பேஜர்களை ரகசியமாக சேதப்படுத்தும் ஒரு பெரிய நடவடிக்கை நிகழ்ந்திருக்கும்.

ஒரு முன்னாள் பிரிட்டிஷ் ராணுவ ஆயுதங்கள் நிபுணர், இந்த சாதனங்கள் ஒவ்வொன்றிலும் 10 முதல் 20 கிராம் வரை ராணுவ உயர்தர வெடிமருந்துகள் நிரப்பி வைக்கப்பட்டிருக்கலாம். போலி மின் சாதனக் கூறுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம்" என்றார். ஒரு எண்ணெழுத்து குறுஞ்செய்தி இதற்கு ஒரு சமிக்ஞையாக செயல்பட்டிருக்கும் என்று நிபுணர் கூறினார்.

இந்த தாக்குதலில் உயிரிழந்த இருவர் ஹெஸ்பொலா எம்.பி.க்களின் மகன்கள் என்று ஹெஸ்பொலாவுக்கு நெருக்கமான வட்டாரம் ஏஎஃப்பி இடம் தெரிவித்தது. ஸ்பொலா உறுப்பினர் ஒருவரின் மகள் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் லெபனானுக்கான ஈரான் தூதர் மொஜ்தபா அமானியும் அடங்குவார். அவருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டிருப்பதாக ஈரானிய ஊடகங்களில் செய்திகள் தெரிவிக்கின்றன.

லெபனான் பொது சுகாதார அமைச்சர் ஃபிராஸ் அபியாட் கூறுகையில், பெரும்பாலானவர்களுக்கு கைகள் மற்றும் முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றார். "பெரும்பாலான காயங்கள் முகம், கண்கள் மற்றும் கைகளில் ஏற்பட்டன. சிலருக்கு விரல் அல்லது கைகள் துண்டிக்கப்பட்டன " என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: "அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் பெரும்பான்மையான மக்கள் சிவில் உடையில் உள்ளனர், எனவே அவர்கள் ஹெஸ்பொலா போன்ற ஒரு குறிப்பிட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களா என்பதைக் கண்டறிவது மிகவும் கடினம். அதே சமயம் படுகாயமடைந்தவர்களில் வயதானவர்கள், சிறிய குழந்தைகள் ஆகியோரும் அடக்கம். துரதிர்ஷ்டவசமாக குழந்தை இறந்ததையும் பார்க்க முடிந்தது. காயமடைந்தவர்களில் சிலர் சுகாதாரப் பணியாளர்களாக உள்ளனர்" என்று அமைச்சர் கூறினார்.

லெபனானுக்கு வெளியே, அண்டை நாடான சிரியாவில் இதேபோன்ற வெடிப்பு சம்பவத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர் என்று பிரிட்டனை தளமாகக்கொண்ட ஹமனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம்' என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்





# கிழக்கும் மலையகமும் சந்தித்த கால் பந்தாட்ட சமர் சமனிலை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கின் ஒழுங்கமைப்பில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணியினருக்கும் ஹட்டன் உதைபந்தாட்ட லீக் அணியினருக்குமான நட்பு ரீதியிலான கால்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

கால்பந்தாட்டப் போட்டியில் இரு அணிகளும் 1-1 என்ற கோல் அடிப்டையில் சமநிலையில் நிறைவடைந்தது.

இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இரு அணியினருக்கும் கிண்ணத்தை வழங்கி கௌரவித்தார்.



# சம்மாந்துறையில் மாவட்ட ஆங்கில தினப் போட்டி

கல்முனைக் கல்வி மாவட்டமட்ட ஆங்கில தினப் போட்டி இன்று புதன்கிழமை சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

சம்மாந்துறை கல்வி வலயம் ஏற்பாடு செய்த மாவட்டமட்ட போட்டிகளின் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் செபமாலை மகேந்திரகுமார் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிலோபரா, பி. பரமதயாளன், எச்.நைஷரூஸ்கான்,எம். சியாட், ஏ.பார்த்தீபன், ஏ.றியாசா, எம். நௌபர்டீன், உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய நான்கு வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்ற நிகழ்வில் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் வரவேற்புரை நிகழ்த்த வளவாளர் கே.குணரத்ன விளக்க உரை நிகழ்த்தினார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.09.2024இல் வெளியிடப்பெற்றது.